19.08.2025 OS.No.179/2021 PW1 Name :.நாகராஜ்

குறுக்கு விசாரணை

1. எனக்கு தமிழ் எழுதபடிக்க ஓரளவிற்கு தெரியும். வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். கண்ணுகவுண்டருக்கு 2 மனைவிகள் என்ற விவரத்தை வழக்கில் சொல்லவில்லை. அதற்கு காரணம் சொல்லமுடியாது. அவர்கள் ரத்தினம், முத்தம்மாள் என்றால் சரிதான். ரத்தினம் மகன் முருகேசன் மகன் மீது கூட இந்த வழக்கு போட்டுள்ளேன். வழக்கு சொத்து ஆதியில் யார் பெயரில் இருந்தது என்பது எனக்கு தெரியாது.
2. ஜக்ரியாபாயிடமிருந்து சொத்தை யார் வாங்கினார்கள் என்பது எனக்கு தெரியாது. பெரியசாமி யார் என்று தெரியாது. அவர் கண்ணுகவுண்டரின் தகப்பனார் என்றால் இருக்கலாம். என் தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் மூன்று நபர்கள். முனிசாமி கவுண்டர், கண்ணு கவுண்டர், சுப்பிரமணி ஆவார்கள். அவர்களுக்கு சொத்து எப்படி வந்தது என்பது பத்திரத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். வாசாஆ1 ஆவணத்தை தற்போது என்னால் முழுமையாக படிக்க முடியாது.
3. அது 1974 ஆண்டு ஆவணம் ஆகும். அது பாகபத்திரம் ஆகும். முனிசாமி கவுண்டர், கண்ணு கவுண்டர், சுப்பிரமணி ஆகியோர்களுக்கிடையில் ஏற்பட்டது ஆகும். அவர்கள் மூன்று பேறும் உயிருடன் இருந்த காலத்தில் அது எழுதபட்டது. அதில் யார்யாருக்கு எந்த சொத்து ஒதுக்கபட்டது என்பது எனக்கு தெரியும். சொத்தின் சர்வே எண் செக்குபந்தி விஸ்தீரணம் என்னால் சொல்ல

முடியாது. மூன்று பேருக்கான சொத்து விவரம் குறித்து தெரியாது என்றால் கண்ணுகவுண்டர் சொத்து பற்றி தெரியும்.

4. அவருடைய சொத்தின் சர்வே எண். 144/7, 144/3, 144/11 ஆகும். 144/7ல் விஸ்தீரணம் 2 ஏக்கர் 14 செண்ட் ஆகும். அதற்கு செக்குபந்தி ரோட்டிற்கு தெற்கு, முனிசாமி கவுண்டர் நிலத்திற்கு வடக்கு செல்வராஜ் நிலத்திற்கு தெற்கு, சுப்பிரமணி நிலத்திற்கு நடுவில், உள்ளது. சுப்பிரமணி நிலத்திற்கு மேற்கே, முனிசாமி கவுண்டர் நிலத்திற்கு கிழக்கில் அமைந்துள்ளது. அந்த சொத்திற்கான பட்டா எண் தெரியாது.

5. 144/3 சொத்திற்கு விஸ்தீரணம் 76 செண்ட் ஆகும். செக்குபந்தி சுப்பிரமணி நிலத்திற்கு மேற்கு, முனிசாமி கவுண்டர் நிலத்திற்கு கிழக்கு, கோவிந்தசாமி நிலத்திற்கு தெற்கு, வண்டிவழிக்கு வடக்கு ஆகும். அதற்கான பட்டா எண் தெரியாது. 144/11 சொத்து 35 செண்ட் ஆகும். செக்குபந்தி பெரியண்ணா நிலத்திற்கு மேற்கு, செல்வராஜ் நிலத்திற்கு தெற்கு, முனிசாமி கவுண்டர் நிலத்திற்கு கிழக்கு, சுப்பிரமணி நிலத்திற்கு வடக்கு ஆகும். அதற்கான பட்டா எண் தெரியாது.

6. வாசாஆ 1 ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன். வாசாஆ1 ஆவணத்தில் மூன்று நபர்களுக்கும் சேர்த்து பொதுவழி வைத்து ஆவணம் எழுதபட்டுள்ளது. அது 12 அடி அகளம், 700 அடி நீளம் என்றால் சரிதான். அதேபோன்று 30 செண்டில் பொது களம் உள்ளது. மேற்படி மூன்று நபர்களும் இறந்ததற்கு பின் அவர்களுக்கு வாரிசுகள் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் அனுபவித்து வருகிறார்கள். வாசாஆ 1 ஆவணம் முனிசாமியின் முதல் வாரிசிடம் இருக்க வேண்டும் என அதில் எழுதபட்டுள்ளது என்றால் அது பற்றி

தெரியாது.

7. வாசாஆ 1 ஆவணம் என்னுடைய பெற்றோரிடம் வீட்டில் இருந்தது. வாசாஆ1 ஆவணத்தை கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து நான் ஏமாற்றி துணைதலைவராக இருந்த காலத்தில் பெற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. கண்ணுகவுண்டர் சொத்துதான் உட்பிரிவு செய்யபட்டுள்ளது என்றால் சரியல்ல. முனிசாமி கவுண்டர் சொத்தும் உட்பிரிவு செய்யபட்டுள்ளது. அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை.

8. உட்பிரிவு எண் எனக்கு தெரியாது. சுப்பிரமணி சொத்து மட்டும் அப்படியே உள்ளது. வழக்கு சொத்தில் உள்ள வழியை பிரதிவாதிகள் அழித்து பயர் செய்துள்ளதால் வழக்கு போட்டுள்ளேன். பிரதிவாதிகள் என்மீது ஒரு வழக்கு போட்டுள்ளார்கள் என்பது தெரியும். அது என்ன பரிகாரத்திற்காக போடபட்டுள்ளது என்பது தெரியாது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அவர்கள் அ.வ.எண். 126/2021 என்ற வழக்கை என்மீது பிரதிவாதிகள் போட்டுள்ளார்கள். நீதிமன்ற ஆணையர் வந்த விவரம் தெரியும். சர்வேயர், மணியகாரரும் வந்தார்கள்.

9. பொதுவழியை நான் அடைத்ததாக அவர்கள் புகைப்படம் தாக்கல் செய்துள்ளது பற்றி எனக்கு தெரியாது அப்படி நான் செய்யவில்லை. நடைவழிதான் இருந்தது. வாசாஆ1 ஆவணத்தில் உள்ள பொதுவழியை பிரதிவாதிகள் அழித்து பயிர் செய்துள்ளார்கள். சுமார் 10 அடி பொதுவழி அழிக்கபட்டுள்ளது. யார் யாருக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்பது எனக்கு தெரியும். முனிசாமி வாரிசுகளுக்கு சுமார் 4 ஏக்கர் சொத்து இருக்கும். சுப்பிரமணி வாரிசுகளுக்கு சுமார் 3 1/2 ஏக்கர் சொத்து இருக்கும்.

10.எல்லா சொத்துகளும் பயிர் செய்யாமல் தான் உள்ளது. ஆழ்துளை கிணற்றை சரி செய்ய வழியில் வண்டி எடுத்து வரவிடாமல் நான் அடைத்துவிட்டதாக என்மீது பிரதிவாதிகள் வழக்கு போட்டுள்ளர்கள். பொது கிணற்றிலிருந்து தண்ணிர் எடுத்து பிரதிவாதிகள் விவசாயம் செய்ய நான் 4 ஆண்டுகளாக நிறுத்திவைத்துள்ளேன் என்றால் அவ்வாறு செய்யவில்லை. என்மீது பிரதிவாதிகள் மேற்படி பிரச்சனை தொடர்பாக வாணியம்பாடி கிராமிய காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார்கள்.

11. விசாரணையில் வழியை நான் சுத்தம் செய்து கொடுப்பதாக எழுதி கொடுத்துவிட்டு வந்து மீண்டும் பிரச்சனை செய்கிறேன் என்றால் சரியல்ல. வழியில் எனக்கு மட்டும் உரிமை இல்லை என்றும் என் அப்பாவின் உடன் பிறந்தவர்களுக்கும் உரிமை உள்ளது என்பது தெரியும். கண்ணுகவுண்டர் முருகேசன் மீது செட்டில்மெண்ட் எழுதியுள்ளார். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாசாஆ 2 ஆவணத்தை நான் மோசடியாக தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

12. சர்வே எண். 144 இதுவரை உட்பிரிவு செய்யபடவில்லை என்றும் வாசாஆ2 ஆவணத்தில் நான் திருத்தங்கள் செய்து மோசடியாக வழக்கில் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. முருகேசனின் பங்கையை சேர்த்து அபகரித்து ஆவணம் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. வாசாஆ2 ஆவணத்தில் பொதுவழி, பொதுகளம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. கிணற்றில் உள்ள பம்புசெட் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 8ல் 1பங்கு கூட்டாக உள்ளது. பொது மின் இணைப்பில் பிரதிவாதிகளை நான் எந்த தொந்தரவு செய்யவில்லை.

13.பிரதிவாதிகள் கிணற்றில் தண்ணீர் இறைக்க பயன்படுத்த நான் அதை தடைசெய்ய மாட்டேன். பிரதிவாதிகளும் என்னை தடுக்க கூடாது. நான் தடை செய்ததால் சுமார் 150 தென்னைமரங்கள் காய்ந்து பல லட்சம் நஷ்டமானது என்றால் அவ்வாறு இல்லை. பொதுவழியில் டிராக்டர் எடுத்துவந்து பிரதிவாதிகள் விவசாயம் செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை. குடிநீர் தண்ணீரை பிரதிவாதிகள் எடுத்து வருவதை தடைசெய்துள்ளேன் என்றால் அவ்வாறு செய்யவில்லை.

14.வாசாஆ4 பட்டா சர்வே எண் 144ல் கூட்டு உரிமை என்று உள்ளது ஆனால் அது என் தகப்பனாரின் தனிபட்டா ஆகும். கூட்டு உரிமையை கடந்த 5 ஆண்டுகளாக தடைசெய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாசாஆ3 ஆவணத்தை 2007 ல் நான் மாற்றியுள்ளேன். என்னுடைய பத்திரத்தை வைத்து அதை மாற்றியுள்ளேன். சர்வேயர், மணியகாரர் வந்து அளந்து பார்த்து கொடுத்தார்கள். 2007ல் வந்தார்கள். அதற்கான மனு நகலையும், பணம் கட்டிய சலானையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. உட்பிரிவு வரைபடத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

15.வாசாஆ3 ஆவணத்தை போலியாக தயார் செய்துள்ளதால் செல்லாது என்றால் சரியல்ல. முருகேசன் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார். அதற்கு நான் பதில் கொடுக்கவில்லை. அறிவிப்பில் வாசாஆ1 ஆவணத்தை நான் அபகரித்து கொண்டதாகவும் பொதுவழியை தடைசெய்ததாகவும் முருகேசன் கூறியுள்ளார். ஸ்ரீதர் என்பவரை அடித்து காயபடுத்தினேன் என்றால் அவர்கள் தான் என்னை அடித்தார்கள்.

16.என்மீதும் என் மகன்கள் மீதும் போலிசார் வழக்கு போட்டார்கள்.

குற்றவியில் நீதிமன்றத்திலஅது நிலுவையில் உள்ளது. பிரிதவாதிகள் மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் நான் 30 நாட்கள் சிறையில் இருந்தேன் என்றால் 14 நாட்கள் தான் சிறையில் இருந்தேன். பிரதிவாதிகள் என்னை தொந்தரவு செய்ததாக வழக்கில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல. தாவாப்பரிகாரம் கிடைக்கமுடியாது என்றால் சரியல்ல

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 19/08/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.08.19 17:14:57 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.